RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2224s1993

# பதிற்றுப்பத்து பாடல்களில் காணலாகும் அறங்கள்

**க. சாந்தி [அ, *]**

[அ] தமிழாய்வுத்துறை, தனலட்சுமி சீனிவாசன் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), பெரம்பலூர்-621212, தமிழ்நாடு, இந்தியா

# Virtues found in Pathitrupathu

**K. Shanthhi [a, *]**

[a] Research Department of Tamil, Dhanalakshmi Srinivasan College of Arts & Science for Women, Perambalur-621212, Tamil Nadu, India

* Corresponding Author: shanthisasik@gmail.com

Received: 09-09-2022
Revised: 03-11-2022
Accepted: 14-11-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

Tamil people are recognised all around the world because of its literary excellence. The way Tamils have compiled their literary wealth is enough to enrich our culture. Our Tamil land is the land where many good people have lived who have given the gift of wisdom to the whole world. The literature of the Sangam period painted colorful pictures of many aspects of life such as government and its system, battlefield, warrior ship, war memory, virtue of love, virtue of flying and domestic dignity. These are the crown jewels of Tamil culture. Tamilians have followed many virtues. Pleasure, home, materiality are the basic virtues that are must in a human's life. The country never fails to admire those who lived according to morality. Virtue or virtue means that the meaning of the Sutra should be recited so that the hearers perceive it in a way that is understood by the listeners. Thus, the virtues mentioned in Pathitrupathu can be found in this article.

**Keywords:** Virtue, Pathitrupathu, Tamil culture, Sangam period

## முன்னுரை

தமிழர்கள் உலகை ஆண்ட பெருமைக்குரியவர்கள். நம்மை உலகின் உச்சிக்குக் கொண்டு சேர்க்கின்ற பெருமைக்குரியவையாக நமக்குள்ளனவெல்லாம் நம் தமிழ் இலக்கியங்களே. தமிழர்கள் இலக்கியச் செல்வங்களைத் தொகுத்து வைத்திருக்கிற முறை ஒன்று போதும் நம் பண்பாட்டினை மெய்பிக்க. இந்தளவிற்கு அகிலத்துக்கே ஞானக் கொடை வழங்கிய நல்லவர்கள் பலர் வாழ்ந்த பூமி நம் தமிழ் பூமி. அரசு, அரசு முறை, போர்களம், வீரர்குணம், போர்மறம், காதல் அறம், ஈகைச்சிறப்பு, இல்லற மாண்பு என்று வாழ்க்கையின் பல கூறுகளை வண்ணமய ஓவியமாக்கிச் செய்தவை சங்க கால இலக்கிய நூல்கள். இவை தமிழ்ப் பண்பாட்டின் தலைமைக்குச் சூடிய மணிமகுடம். வாழ்க்கை அறவழி பிசகாது நடக்கத் தமிழர்களை எல்லாம் ஆற்றுப்படுத்த உள்ள அழகு தமிழ்ப்பனுவல், புதையல் நம் இலக்கிய நூல்கள். இவை ஏராளமான அறக்கருத்துகளை உடையவை. இதில் உறுதி பொருட்கள் என்பது அறம், பொருள், இன்பம், வீடு ஆகியனவாகும். "அற ஒழுங்கு ஊரை ஆளும் "என்பது பழமொழி. அற ஒழுக்கத்தின்படி வாழ்ந்தவர்களை நாடு போற்ற தவறுவதில்லை. சான்றோர் சென்ற அறவழியிலேயே தானும் செல்லுதல் வேண்டும் என்ற நற்செய்கைக்கு கடமைப்பாடு ஒன்றையே அடிப்படையாகக் கொண்டது இந்த உறுதிப்பொருட்களின் பயன்பாடு. அறம் அல்லது அறவழி என்பது எடுத்துக்கொள்ளப்பட்ட பொருளினுள் யாதானும் ஒருவகையாற் கேட்போர் உணர்வு புலன்

கொள்ளுமாறு எடுத்துக்கொண்ட சூத்திரம் பொருள் உரைக்கப்பட வேண்டும். அவ்வகையில் பதிற்றுப்பத்தில் உரைக்கப்பட்டுள்ள அறங்களை இந்தஆய்வில் காணலாம்.

## விருந்தோம்பல் அறம்

தமிழரின் மரபுகளில் சிறந்த மரபாக விருந்தோம்பல் இன்றுவரை கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இதனை வள்ளுவர்,

"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து

நோக்கக் குழையும் விருந்து" என்றார் (Parimelaragar, 2007).

விருந்தோம்பல் என்பது முகமலர்ச்சியுடன் செய்வதாகும். இல்லையெனில் அனிச்சம் மலரை முகர்ந்து பார்த்தாலே வாடிவிடுவது போல, விருந்தினரது முகமும் வாடிவிடும். குறுந்தொகையில் முல்லை பாடல் ஒன்றில் புது மனைவியானவள் தன் கணவனுக்கு விருந்தோம்பல் செய்வதை செவிலி, தாயிடம் கூறுகிறாள்.

"முளி தயிர் பிசைந்த காந்தள் மெல் விரல்

கழுவுறு கலிங்கம், கழா அது, உடீஇ,

குவளை உண்கண் குய்ப்புகை கழுமத்

தான் துழந்து அட்ட தீம் புளிப் பாகர்

இனிது எனக் கணவன் உண்டலின்

நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே"

என்ற பாடல் கணவனுக்கு மனைவி விருந்தோம்பல் செய்து மகிழ்விப்பதை காணமுடிகிறது (Nagarajan, 2004). பதிற்றுப்பத்து பாடலில் விருந்தோம்பலை

"தொல்பசி உழந்த பழங்கண் வீழ

எஃகு போழ்ந்து அறுந்த வால் நிணக் கொழுங்குறை,

மைஊன் பெய்த வெண்ணெல் வெண்சோறு,

நனை அமை கள்ளின் தேறலொடு மாந்தி

நுகர்தற்கு இனிது, நின் பெருங்கலி மகிழ்வே!"

மிகப்பெரிய சுற்றத்தினர் நீண்ட நாட்களாக பசியால் வருந்துகின்றனர். அவர்களுக்கு நல் ஆடை வழங்கி, ஆட்டின் இறைச்சியுடன், வெண்ணெல் சோறு சமைத்து அதனுடன் கள்ளும் தந்து விருந்தினருக்கு விருந்தோம்பல் செய்த நிகழ்வுகள் சங்க இலக்கியங்களில் சிறந்த அறமாகப் போற்றப்படுகிறது (Parimelaragar, 1980).

## பாதுகாத்தல் அறம்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்ற கூற்றிற்கு இணங்க ஒன்றுபட்டு வாழ்தலும் கூடி வாழ்தலும் பேரின்பம் தரும். அதனோடு தம் சுற்றத்தை பேணி பாதுகாத்தலும், நமக்கு வேண்டியவர்களைப் பாதுகாத்தலும், வறியவர்களை வாழவைத்தலும் சிறந்த அறம் ஆகும். இதனை பரிபாடலில்

"ஆங்கு,

காமரு சுற்றமொடு ஒருங்கு நின் அடியுறை

யாம் இயைந்து ஒன்றுபு வைகலும் பொலிக என"

என்பதில், எம்மால் விரும்பப்படும் சுற்றத்தாரோடு உன் திருவடியின் கண்ணே ஒன்று சேரக்கூடி நின்று உன் திருவடி நிழலைத்தொழுது நாள்தோறும் இன்பமுற்று விளங்க வேண்டிய மனத்தினை உடையவர்களாக, கூடி வாழ வேண்டும் என்ற அறம் பேணப்படுகிறது (Annamalai, 2004). பதிற்றுப்பத்தில்,

"மழை வேண்டு புலத்து மாரி நிற்ப,

நோயோடு பசி இகந்து ஓரிஇ,

பூத்தன்று பெரும! நீ காத்த நாடே!"

நெல் முதலிய தானியங்களை விற்கும் வணிகர் குடிகளைப் பாதுகாத்தும், உழுது உண்ணும் வேளாளர் தம் எளிய குடும்பங்களைப் பாதுகாத்தும் வருகின்றாய் என்று சேர மன்னனின் பாதுகாத்தல் அறம் பேசப்படுகிறது. அதனுடன் நாடு காத்தல் அறமாக, நீ நாட்டினை இனிதாகக் காத்துப் பயிர் விளைவுகள் குறையாமல் செய்து குடிமக்கள் அனைவரும் பகை, பசி, பிணி என்னும் துன்பங்கள் இன்றி அமைதியாக வாழும்படி ஆட்சி செய்தல் ஆகும் (Parimelaragar, 1980).

## ஆற்றல் அறம்

நிலம், நீர், காற்று, வானம் என்ற நான்கு பூதங்களைப் போல நீ அளத்தற்கரியவன். நீ விண்மீண்கள், கோள்கள், திங்கள், கதிரவன், மிக்க தீ ஆகிய ஐந்தும் ஒன்று சேர்ந்தாற் போன்ற ஒளி பொருந்திய ஆற்றலை உடையவன் என்பதை பதிற்றுப்பத்தில் கீழ்க்கண்ட பாடல் வரிகளில் காணலாம்.

"ஆமர் கடந்து மலைந்த தும்பைப் பகைவர்

போர், பீடு, அழித்த செருப்புகல் முன்ப!

கூற்று வெகுண்டு வரினும், மாற்றும் ஆற்றலையே"

இவ்வாறு மிகுந்த ஆற்றலை உடைய அரசன் தனது குடிமக்களை அனைத்து விதத்திலும் நன்றாக அரவணைத்துச் செல்லும் ஆற்றலை பெற்றிருப்பான் என்பதனை பாடல் வரிகள் உணர்த்துகிறது (Balasubramanian, 2006).

## கற்பு அறம்

நிலவில் களங்கம் உள்ளது போன்று ஒருவன் ஒருத்தியோடு இல்லாத வாழ்வு களங்கம் உடையது ஆகும். இதனை ஒருத்தியோடு மனையரும் வழிப் பிறளொருத்தி அகலத்தை(மார்பினை) சேர்தல் கூடாமையின் சிறந்ததன்று என்று பரிமேழகர் விளக்குகிறார்.

"ஆறிய கற்பின், அடங்கிய சாயல்,

ஊடினும் இனிய கூறும் இன் நகை,

அமிர்து பொதி துவர்வாய், அமர்த்த நோக்கின்"

ஆறிய கற்பு என்பது அறக்கற்பினைக் குறிக்கும் (Parimelaragar, 1980). இதனை அடங்கிய கற்பு சீரிய கற்பு என்று போற்றுவது மரபு. கோவலன் இருக்கும் வரை கண்ணகி கொண்டிருந்த கற்பு அறக்கற்பென்றும் அவன் இறந்தபின் அவள் கொண்ட கற்பு மறக்கற்பு என்றும் விளக்குவர். அறக்கற்பினையும், அடக்கத்தோடு மென்மையான சாயவினையும், நின்னோடு ஊடல் கொள்ளும் காலத்தில் கூடப் புன்னகையுடன் கூறும் இனிய மொழியையும் எயிற்றில் ஊறிய அமிழ்து நிறைந்த சிவந்த வாயினையும், விரும்பிய பார்வையையும், ஒளி பொருந்திய நெற்றியினையும், தளர்ந்த நடைடையுமுடைய நின் மனைவியாகிய பெருந்தேவி நின் பிரிவை எண்ணி வருந்துதல் கூடும் என்பதை கற்பு அறம் விளக்குகிறது.

## ஈகை அறம்

“இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்

அசையுடன் இருந்தோர்க்கு அரும்புணர்வு இன்மென

வினைவயிற் பிரிந்த வேறுபடு கொள்கை”

இம்மைக்குரிய புகழும், இருமைக்குரிய இன்பமும் அங்ஙனம் மறுமையிலும்

இன்புறுதற்கேதுவாகிய இரந்தோர்க்கீதல் முதலாகிய கொடைமையும் ஆகிய இம்மூன்றும் சிறப்புடையது எக்காலத்துமாகும் (Balasubramanian, 2006).

“தண்இயல் எழிலி தலையாது ஆயினும்,

வயிறு பசி கூர ஈயலன்

வயிறு மாசு இலீயர், அவன் ஈன்ற தாயே!”

எம்மை போன்ற பாணருக்கும் கூத்தர், பொருநர் போன்ற பிறருக்கும், இவரன்றித் தம்பால் பரிசு பெறவரும் வேறு யாவராயினும் பரிசில் பெறுவதற்குரிய வகையில் இல்லாமல் இருப்பினும் கொடுத்தல் ஆகிய கடமையை மட்டும் நோக்கி நம்மவரென்றும் பிறரென்றும் பாராமல் ஈயும் ஒருபாற்போடாத நெஞ்சினையுடையவன் குளிர்ந்த இயல்பையுடைய மேகம் விட்டாலும் தன்னைச் சார்ந்தவர் வயிறு பசிக்கும்படி ஈயாமல் இருக்க மாட்டான். ஆவனைப் பெற்ற தாயின் வயிறு குறையின்றி விளங்கும் (Parimelaragar, 1980).

## பொய் கூறா அறம்

“வாய்ப்பு அறியலனே, வெயில் துகள் அனைத்தும்

மாற்றோர் தேஎத்து மாறிய வினையே:

கண்ணின் உவந்து, நெஞ்சு அவிழ்பு அறியா

நண்ணார் தே எத்தும் பொய்ப்பு அறியலனே”

புகைவர் நாட்டின் கண் படையெடுத்துச் சென்று செய்த போரில் பின் வாங்குதலை வெயில் துகளளவேனும் அறியாதவன். கண்ணிலே உவப்பை வெளிப்படுத்தி உள்ளத்தின கண்ணே மலர்ச்சியில்லாமல் பகைகொண்டுள்ள பகைவர்மாட்டும் கனவினும் பொய் கூறுதலை அறியாதவன். அரசியல் காரணமாகப் பொய் கூற வேண்டி செவ்வி நேருமாயினும் அப்பொழுதும் பொய்த்தலறியான். கனவினும் பொய்பறியலனே என்பதாகும் (Parimelaragar, 1980).

## அருள் அறம்

அறவழியில் வாழ்பவர்கள் தூய உண்மை அன்பை கடவுளிடத்துச் செலுத்துபவர். அதன் விளைவாக திருவருள் எளிதில் கிட்டும். இவ்வுலக வாழ்வை வெறுத்து இறைவனிடம் சேருவதற்கு அருள், அன்பு, அறம் ஆகியன பயன்படும். அறிவுடையோரையும் அறிவில்லாதோரையும் தெரிந்து அவர்களுடைய அறிவின் அளவை ஆராய்ந்து அவரவர் தகுதிக்கேற்ப அருள் செய்ய வேண்டும்

“உரவரும் மடவரும் அறிவு தெரிந்து எண்ணி,

அறிந்தனை அருளாய ஆயின்,

யார் இவண், நெடுந்தகை வாழுமோரே!” (Parimelaragar, 1980)

## முன்னோர்களது கொடை அறம்

"இட்ட வெள் வேல் முத்தைத் தம் என

முன் திணை முதல்வர் போல நின்று

தீம் சுனை நிலை இய திரு மா மருங்கின்

கோடு பல விரிந்த நாடு காண் நெடு வரை"

செல்வ கடுங்கோ வாழியாதன் தனக்கு முன்னிருந்த தன் குலத்து முன்னோர்களைப் போல அறநெறியில் நிலைபெற்றவன். இனிய நீரினையுடைய சுனைகள் நிலைபெற்றதும் மலை வளத்தையுடையதுமான பெரிய பக்கங்களை பெற்ற சிகரங்கள் பல ஆகாயத்தே விரிந்த தன்மீது ஏறி நாடு முழுவதும் காணக்கூடிய உயர்ச்சியைப் பெற்ற நன்றாவென்னும் மலையிடத்தில் அரசர்கள் எல்லாரும் வந்து வணங்குவர். அவன் அறத்தையே விரும்பி செய்பவன். அதாவது தன் முன்னிருந்த தன் குலத்து முன்னோர்களைப் போல கொடுத்து உதவி செய்து அவர்களது அறத்தை பேணிகாக்கம் மன்னனாக விளங்குவதை எடுத்துரைக்கிறது இப்பாடல் ஆகும் (Parimelaragar, 1980).

## அன்பு அறம்

அன்படைமையால் நீரோடு ஒத்தனை. வறியோர்க்கு குறைவுபடாது மேகத்தை போல கொடுத்து உதவும் அறம். நட்சத்திரங்களுக்கு நடுவே சந்திரனாய் குளிர்ச்சி பொருந்தி பொலிவுபெற்ற சுற்றத்தோடு அன்பு எனும் அறம் செலுத்தியதை

"கொளக் குறைபடாமையின் முந்நீர் அனையை

பல் மீன் நாப்பண் திங்கள் போல

பூத்த சுற்றமொடு பொலிந்து தோன்றலை" (Parimelaragar, 1980)

"அறத்திற்கே அன்பு சார் என்ப அறியார்

மறத்திற்கும் அ∴தே துணை" (Parimelaragar, 2007)

## வேண்டப்படாத குற்றம்

செங்கோல் செலுத்தும் அரசருக்கு வேண்டபபடாத குற்றங்கள் உண்டு. இவற்றை களைந்து அவ்வரசனும் நல்லறங்களை உடையவராக காணப்படுகிறார். அவ்வாறு நீக்கப்பட்ட குற்றங்கள் மிகுந்த கோபம். மிகுந்த காமம், அளவிறந்த கண்ணோட்டம், பகைவர்க்கு அஞ்சுதல், பொய் கூறல், பொருளினிடத்து அளவுக்கு மிஞ்சிய பற்று வைத்தல், அளவுக்கு மீறிய தண்டனை அளித்தல், போன்ற பிறவும் இவ்வுலகில் அறவழியில் ஆட்சி செலுத்துதற்குரிய அரசனது ஆணைச் சக்கரத்திற்க தடையாக நிற்பன. இதனை

"சினனே காமம் கழி கண்ணோட்டம்

அச்சம் பொய் சொல் அன்பு மிக உடைமை

தெறல் கடுமையோடு பிறவும் இன் உலகத்து

அறம் தெரி திகிரிக்கு வழியடை ஆகும்"

இத்தீமைகளெல்லாம் தம்மை நெருங்காது சேய்மையிலே விட்டு நீங்கி நன்மை பயப்பனவற்றையே செய்து கடலும் கடலினையடுத்த காடாகிய முல்லை நிலங்களும் காட்டையடுத்த நிலங்களும் பல பயன்களையும் உதவுமாறு செய்து குடிமக்கள பிறரை வருத்தாமலும் பிறர் பொருளை விரும்பாமலும் செந்நெறியில் ஒழுகித் தம்மை விரும்புகின்ற தம் மனைவியரைப் பிரியாது தம் இல்லம் நாடி வரும் விருந்தினருக்கு தமக்குள்ளதைப் பகுத்தளித்துத் தாமும் உண்டு குடிமக்கள்

முதுமையும் நோயும் இல்லாமல் நல்லுடம்போடு நெடுநாள் வாழும் வகையில் ஆட்சி செலுத்துவN சிறந்த அறமாகும் (Parimelaragar, 1980).

## முடிவுரை

அறத்தை அன்றே செய்க. அது இறக்கும் தருவாயில் அழியா துணை நிற்கும். அறம் நிகழ்காலத்திலும் முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டிய ஒன்று. நிகழ்காலத்தில் மட்டுமல்ல, எதிர்வரும் காலங்களிலும் கூட முக்கியத்துவம் முன்னுரிமை தர வேண்டியது இவ்வறம். இன்றைய செய்தி நாளைய வரலாறு என்று கூறுகிறோம் அல்லவா? அது போன்றே இப்பிறவி அறமானது மறுபிறவிக்கும் பயனளிக்கக் கூடியதாகும். நன்றே செய் அதனை நன்றே செய் என்பார்கள். அப்படியான அறக்கருத்துகளை செய்வதற்கு நாள் கோள் அவசியம் இல்லை. நல்லது செய்கின்ற எல்லா நாளும் கடவுள் நம் அருகில் இருக்கிறார். ஆகவே அறம் செய்ய பழகி பிறருக்கும் கற்றுத்தந்து நாமும் பின்பற்றுவோம்.

## References

Annamalai, S. (2004) Aganaanooru Moolamum Uraiyum, Koviloor madalayam, Koviloor, India.

Balasubramanian, K.V. (2006) Nattrinai, Paavai Publications, Thanjavur, India.

Nagarajan, V. (2004) Kurunthogai Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India.

Parimelaragar, (1980) Paripadal, U.Ve. Saminathaiyar Book House, Chennai, India.

Parimelazhagar, (2007) Thirukkural, Sharadha Publishing, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License